**செ.வெ.எண்: 75** **நாள்: 25.11.2021**

**விழுப்புரம் மாவட்டம் காணை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் ஊரக வளர்ச்சித்துறை சார்பாக செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சி திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.மோகன்.இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

விழுப்புரம் மாவட்டம் காணை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் ஊரக வளர்ச்சித்துறை சார்பாக செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சி திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.மோகன்.இ.ஆ.ப., அவர்கள் இன்று (25.11.2021) நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

விழுப்புரம் மாவட்டம் காணை ஊராட்சி ஒன்றியம் சூரப்பட்டு ஊராட்சிக்குட்பட்ட அரும்புலி பகுதியில் ஜல் ஜீவன் மிஷன் திட்டத்தின்கீழ் வீடுகளுக்கு குடிநீர் இணைப்புகள் முறையாக வழங்கப்பட்டுள்ளதா என்பதை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.மோகன்.இ.ஆ.ப., அவர்கள் நேரில் ஆய்வு மேற்கொண்டார். மேலும், அப்பகுதியில் வீட்டு மனைப்பட்டா இல்லாமல் ஏழ்மை நிலையில் குடிசை வீடுகளில் வசித்து வருபவர்களுக்கு உடனடியாக வீட்டுமனைப் பட்டா வழங்க உரிய நடவடிக்கை எடுக்க வட்டாட்சியருக்கு உத்தரவிட்டார்.

தொடர்ந்து காணை ஊராட்சி ஒன்றியம் கக்கனூர் ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் நூறு நாள் வேலை பணிகளில் ஈடுபட்டுள்ளவர்களிடம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.மோகன்.இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று கலந்துரையாடி தங்களுக்கு நூறு நாள் வேலை திட்டத்தில் பணிகள் மற்றும் ஊதியம் முறையாக வழங்கப்படுகிறதா எனவும், பணிகள் மேற்கொள்ள ஏதுவாக உரிய அடையாள அட்டை பெற்றுள்ளீர்களா எனவும், தங்கள் பகுதிகளில் உள்ள நியாய விலை கடைகளில் அத்தியாவசியப்பொருட்கள் முறையாக வழங்கப்படுகிறதா எனவும், மேலும் நூறு நாள் வேலை வாய்ப்பு திட்டத்தில் பணிபுரிவோர் மற்றும் தங்கள் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் கட்டாயம் கொரோனா தடுப்பூசி செலுத்திக்கொள்ள வேண்டும் எனவும், கொரோனா தடுப்பூசி செலுத்திக்கொள்ளாத நபர்களை தடுப்பூசி செலுத்திக்கொள்ள அறிவுறுத்த வேண்டும் எனவும், தாங்கள் மேற்கொண்டுள்ள பணிகளை சிறப்பான முறையில் செய்திட வேண்டும் எனவும் அறிவுறுத்தினார்.

தொடர்ந்து காணை ஊராட்சி ஒன்றியம் அத்தியூர் திருக்கை ஊராட்சி அரசு மேல்நிலைப்பள்ளியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.மோகன்.இ.ஆ.ப., அவர்கள் நேரில் ஆய்வு மேற்கொண்டு மாணவ, மாணவியர்களுடன் கலந்துரையாடினார். மேலும், அனைவரும் நன்கு கல்வி கற்று சமுதாயத்தில் சிறந்தவர்களாக திகழ வேண்டும் என மாணவ, மாணவியர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

தொடர்ந்து அத்தியூர் திருக்கை ஊராட்சியில் அமைந்துள்ள ஒருங்கிணைந்து குழந்தைகள் வளர்ச்சி திட்டத்தின்கீழ் இயங்கி வரும் அங்கன்வாடி மையத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.மோகன்.இ.ஆ.ப., அவர்கள் குழந்தைகளுக்கு வழங்கப்படும் மதிய உணவின் தரத்தினை உண்டு பரிசோதித்தார்.

இதனை தொடர்ந்து விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றியம் வேம்பி ஊராட்சியில் 100 சதவீதம் அனைவருக்கும் கொரோனா தடுப்பூசி செலுத்தும் வகையில் நடைபெற்றுவரும் மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.மோகன்.இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டார்.

இந்த ஆய்வின்போது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.ஆர்.சங்கர், ஊரக வளர்ச்சித்துறை செயற்பொறியாளர் திருமதி.வெண்ணிலா மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் பலர் உடனிருந்தார்கள்.

---

வெளியீடு: : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், விழுப்புரம்.